செ.வெ.எண்: 319/2019 நாள்: 11.7.2019

**திருக்குறள் ஒப்புவிக்கும் சாதனை மாணவி நளாயினி குடும்பத்திற்கு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்டும் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சு.நல்லூர் கிராமத்தில் வசித்து வரும் திருக்குறள் ஒப்புவிப்பதல் சாதனை புரிந்து வரும் மாணவி நளாயினி குடும்பத்திற்கு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்டுவதற்கான பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று தொடங்கி வைத்து, மாணவி நளாயினிக்கு ஒரு பவுன் தங்க சங்கிலி அணிவித்து, புதிய LED தொலைக்காட்சி பெட்டி பரிசாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. ஸ்ரீதேவி, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. தமயந்தி, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சு.நல்லூர் கிராமத்தில் வசித்து வரும் மாணவி நளாயினி (வயது 11), தற்போது சு.நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 6-ம் வகுப்பு படித்து வருகிறார். நளாயினி தந்தை அண்ணாதுரை கூலி வேலை செய்து மிக ஏழ்மையான சூழ்நிலையில் குடும்பததை நடத்தி வருகிறார். தாய் சுதா வீட்டை கவனித்து வருகிறார். அண்ணாதுரை, சுதா தம்பதியினருக்கு மொத்தம் 6 குழந்தைகள், இதில் 4 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள், நளாயினி மூன்றாவது குழந்தை ஆவார். நளாயினி ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வந்தாலும், படிப்பில் அதிக ஆர்வம் கொண்டு ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் மிகவும் நன்றாக படித்து வருகிறார். நளாயினியின் சிறப்பு திருக்குறள் 133 அதிகாரத்தில் உள்ள 1330 குறள்களில் எந்த வரிசையில் எப்படி மாற்றிக் கேட்டாலும் அந்த குறளினை சரியாக ஒப்புவிப்பார்.

நளாயினி சு.நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 3-ம் வகுப்பு படிக்கும் அவரது ஆசிரியர் தினமும் 10 திருக்குறள் மூன்று முறை படிக்க வேண்டும், அடுத்த நாள் படித்த திருக்குறளை ஆசிரியிரிடம் ஒப்புவிக்க வேண்டும் என பயிற்சி அளித்துள்ளார். இந்த பயிற்சி நளாயினியை மேலும் ஊக்கப்படுத்தி உள்ளது. நளாயினி தனது ஆசிரியிரிடம் தான் அனைத்து திருக்குறளையும் படித்து, பார்க்காமல் ஒப்புவிக்க பயிற்சி அளிக்க கேட்டுள்ளார். இதன் அடிப்படையில் ஆசிரியிர்கள் மாணவி நளாயினிக்கு 1330 குறள்களையும் படித்து, ஒப்புவிக்கும் பயிற்சி படிப்படியாக அளித்துள்ளார்கள். நளாயினி நான்காவது வகுப்பு படிக்கும் போது பள்ளிக் கல்வித் துறை சார்பாக நடைபெற்ற கலைத் திருவிழாவில் கலந்து கொண்டு திருக்குறள் ஒப்புவிப்பதில் முதல் பரிசு பெற்றார். மேலும், அதனை தொடர்ந்து பள்ளிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் திருக்குறள் ஒப்புவிப்பதில் பரிசுகள் பெற்று சாதனை புரிந்து வருகிறார். இது மட்டும் அல்லாமல் மாணவி நளாயினி 'சிவபுராணம்' முழுமையாக பாடும் திறனையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் தான் மாணவி நளாயினி மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து வாழ்த்து பெறுவதற்காக கடந்த வாரம் மாவட்ட ஆட்சியரகம் வருகை புரிந்துள்ளார். அப்போது மாணவி நளாயினி தான் பெற்ற பரிசுகள், புகைப்படங்களை மாவட்ட ஆட்சியரிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார், மாவட்ட ஆட்சியர் அவர்கள் நளாயினிக்கு திருக்குறள் புத்தகம் பரிசாக வழங்கினார். மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேலும் நளாயினி குடும்பம் குறித்து கேட்கும் போது, அவரது ஏழ்மை நிலை மற்றும் மிகவும் சேதமடைந்த வீட்டில் குடும்பத்துடன் சிரமப்பட்டு வசித்து வருவதும் தெரிந்தது. மாவட்ட ஆட்சியர் உடனடியாக மாணவி நளாயினி குடும்பத்திற்கு பசுமை வீடு திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்டுவதற்கு உத்தரவிட்டார். இதன் அடிப்படையில் இன்று (11.7.2019) மாவட்ட ஆட்சியர் அவர்கள் சு.நல்லூர் கிராமத்திற்கு நேரில் சென்று நளாயினி குடும்பத்திற்கு கழிவறை உட்பட அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய வீடு கட்டும் பணிகளை தொடங்கி வைத்தார். மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் நளாயினியின் திறமையை பாராட்டும் வகையிலும், அவரை ஊக்கப்படுத்தும் வகையிலும் 8 கிராம் தங்க சங்கிலி அணிவித்து, அவரிடம் புதிய LED தொலைக்காட்சி பெட்டியினை பரிசாக வழங்கினார்.

மாணவி நளாயினி குறித்து சு.நல்லூர் கிராம மக்கள் தெரிவிக்கையில் 'நளாயினி யாருடைய தயவும் இல்லாமல் சொந்தமாக படித்து வருகிறார். மேலும், நளாயினி எங்கும் தனியாக பயிற்சி வகுப்புகளுக்கும் சென்றதில்லை' என்றார்கள். மாணவி நளாயினி தெரிவிக்கையில் 'என்னுடைய குறிக்கோள், இலட்சியம் எல்லாம் கலெக்டர் ஆகி என் போன்ற ஏழைகளுக்கு உதவி செய்வேன்' என்றார். மாணவி நளாயினி ஆசிரியர்களிடம் தான் முழுமையாக திருக்குறள் ஒப்புவிப்பதற்கு எந்த வகையில் பயிற்சி எடுக்க வேண்டும் என ஆர்வமாக கேட்டு, தற்போது திருக்குறள் ஒப்புவிப்பதில் சாதனை புரிந்து வருகிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**